ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

2025இற்கும் அதற்கு
அப்பாலுக்குமான
இலங்கை மத்திய வங்கியின்

# கொள்கை அறிக்கை

75 YEARS
STABILITY FOR PROSPERITY
1950-2025

**உள்ளடக்கம்**

முகப்புரை ..... 2

1. 2024இல் பொருளாதார மற்றும் நிதியியல் துறைச் செயலாற்றம் ..... 3

2. விலை உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்கும் கொள்கைகள் ..... 10

*முக்கிய பண்புகள்* ..... 10

2.1. நாணயக் கொள்கை மற்றும் தோற்றப்பாடு ..... 10

2.2. நாணயக் கொள்கையின் நடைமுறைப்படுத்தல் ..... 13

2.3. வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினைப் பேணுதல் ..... 14

3. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை நோக்காகக் கொண்ட கொள்கைகள் ..... 17

*முக்கிய பண்புகள்* ..... 17

3.1. வங்கித்தொழில் துறைக் கொள்கைகள் ..... 17

3.2. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறைக் கொள்கைகள் ..... 19

3.3. பேரண்ட முன்மதியுடைய கொள்கைகள் ..... 19

3.4. நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியின் கீழான முன்னெடுப்புக்கள் ..... 21

3.5. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் ..... 21

3.6. நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகளை மேம்படுத்தல் ..... 23

4. மத்திய வங்கியின் ஏனைய கொள்கைகளும் தொழிற்பாடுகளும் ..... 24

*முக்கிய பண்புகள்* ..... 24

4.1. நிதியியல் வசதிக்குட்படுத்தல் ..... 24

4.2. பொதுப்படுகடன் முகாமைத்துவம் ..... 25

4.3. வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் ..... 25

4.4. நிதியியல் உளவறிதல் ..... 26

4.5. ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமைத்துவம் ..... 27

4.6 மத்திய வங்கியின் தொடர்பூட்டல் உபாயம் ..... 28

4.7. மத்திய வங்கியின் உள்ளக செயற்றிறனை வலுப்படுத்துதல் ..... 29

5. இறை, நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுக் கொள்கை ஒருங்கிணைப்பு ..... 30

6. முடிவுரை ..... 32

## முகப்புரை

*வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்ததற்குப் பின்னர் இலங்கை குறிப்பிடத்தக்க மீட்சியொன்றினை அடைந்துள்ளது. தீர்க்கமான கொள்கை நடவடிக்கை மற்றும் ஒருங்கிணைந்த தீர்மானம் என்பவற்றினூடாக மீட்டெடுக்கப்பட்ட பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடானது வலுவானதும் பெருமளவு தாக்குப்பிடிக்கக்கூடியதுமான பொருளாதாரமொன்றிற்கு அடித்தளமிட்டுள்ளது. அடையப்பட்ட உறுதிப்பாட்டினை உச்சளவில் பயன்படுத்தி, பொருளாதார சீர்திருத்த திட்டத்தினை தொடர்வதன் மூலமும், அதன் பொருளாதாரத் தாங்கியிருப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் ஆளுகை என்பவற்றை வலுப்படுத்துவதன் மூலமும், சாத்தியமான சவால்களுக்கான தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையினைக் கட்டியெழுப்புவதன் மூலமும் நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்துகொண்டிருக்கின்றது. படுகடன் மறுசீரமைப்பு மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடு என்பவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்த்ததனை விட விரைவான மீட்சியானது புதுப்பிக்கப்பட்ட வியாபாரம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கையினால் ஆதரவளிக்கப்பட்டது. உயர் பணவீக்கக் காலப்பகுதியொன்றினைத் தொடர்ந்து பொதுவான விலை மட்டங்கள் கீழ் நோக்கிச் சீராக்கப்பட்டுள்ளமையானது தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் தொடர்ச்சியினை இயலச்செய்கின்றது. நெகிழ்ச்சிவாய்ந்த செலவாணி வீத முறைமைக்கு மத்தியில் மேம்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களினால் ஆதரவளிக்கப்பட்டு வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்கள் கட்டியெழுப்பப்பட்டது. வறியோர் மற்றும் பாதிப்படையக்கூடியவர்களுக்கு வழங்கப்படும் ஆதரவினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுடன் இணைந்து இறைத் துறைச் செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று பதிவுசெய்யப்பட்டது. ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் வலுப்படுத்தல் மற்றும் மேம்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு என்பவற்றினூடாக நிதியியல் முறைமை உறுதிப்பாடானது வலுப்படுத்தப்பட்டது. பொருளாதாரச் சீர்திருத்த நிகழ்ச்சிநிரலைப் பின்பற்றுவதில் பொது மக்கள் உள்ளடங்கலாக பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களினதும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சி மற்றும் தியாகங்கள் என்பவற்றின் விளைவுகளாக இவ்வடைவுகள் காணப்படுகின்றன. மிக முக்கியமாக, இவ்வழிமுறைகள் முதலீட்டாளர் நம்பிக்கையினை மீட்டெடுப்பதற்கும் பொருளாதாரத்தின் நீண்டகால நிலைமாற்றத்திற்கான தளத்தினை அமைப்பதற்கும் துணைபுரிந்துள்ளன. பரந்த அடிப்படையிலான உறுதிப்பாடு அடையப்பட்டுள்ளவேளையில், முன்னோக்கிச் செல்கையில் புத்துருவாக்கத்தினைத் தூண்டுதல், உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், கட்டமைப்புசார் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வலுவான திடசங்கற்பத்தினைப் பேணுதல் மற்றும் கடின உழைப்பின் மூலம் பெறப்பட்ட உறுதிப்பாட்டினை விட்டுக்கொடுக்காமல் பாரியளவிலான ஆர்வலர் கூட்டிணைப்பினை ஊக்குவித்தல் ஆகியவற்றினைத் தேவைப்படுத்துகின்ற நிலைபேறான வளர்ச்சியினை மேம்படுத்துதல் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அதன் ஆணையுடன் இசைந்து செல்லும் விதத்தில் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கும் அதன்மூலம், பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களும் செழித்தோங்குவதனை இயலச்செய்கின்ற சூழலொன்றினை உருவாக்குவதில் மத்திய வங்கி முன்னணி வகிபாகமொன்றினை ஆற்றும். **75ஆவது ஆண்டு விழாவினை மத்திய வங்கி** கொண்டாடும் வேளையில் அதிகரித்தளவிலான கவனம் மற்றும் முயற்சிகள் **சுபீட்சத்திற்கான உறுதிப்பாட்டினைப்** பேணுவதனை நோக்கியதாக நெறிப்படுத்தப்படும்.*

## 1. 2024இல் பொருளாதார மற்றும் நிதியியல் துறைச் செயலாற்றம்

**2024 ஆண்டு காலப்பகுதியில், இலங்கைப் பொருளாதாரமானது பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை மீள்நிறுத்துவதிலும் அதன் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணுவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்தது.** பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியானது தொடர்ந்து பொருளாதார நிலைமைகளின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவளித்தது. நாட்டின் பொருளாதார மீட்சிப் பயணத்தில் முக்கியமானதொரு மைல்கல்லினைக் குறிக்கின்ற வேளையில், **இலங்கை அதன் வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயல்முறையினை, ஒரு சிறிய பகுதி நீங்கலாக, 2024 இறுதியளவில் வெற்றிகரமாக நிறைவுசெய்தமையானது** கொடுகடன் வழங்குநர்கள் மற்றும் வெளிநாட்டுப் பங்காளர்களுடனான தொடர்புகளை இயல்பாக்குவதற்கு வழிவகுத்தது. இவ்வபிவிருத்திகளைத் தொடர்ந்து, இரண்டு முன்னணித் தரமிடல் முகவராண்மைகளினால் **நாட்டின் இறையாண்மைத் தரமிடலானது மேம்படுத்தப்பட்டதுடன்** அதன்மூலம், நாட்டின் இடர்நேர்வு மிகை குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டது.

**பணவீக்கமானது 2024 ஆண்டு முழுவதிலும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்ததுடன் ஆண்டின் பிற்பகுதியில் பணச்சுருக்க மட்டங்களை எட்டியது.** பெறுமதி கூட்டப்பட்ட வரியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் நுகர்வோர் கூடையில் உள்ள பல்வேறு பொருட்களிலிருந்து பெறுமதி கூட்டப்பட்ட வரி விலக்களிப்புக்களின் நீக்கம் என்பன காரணமாக 2024இன் தொடக்கத்தில் முதன்மைப் பணவீக்கத்தில் தற்காலிக விரைவடைதலொன்று ஏற்பட்டது. இருப்பினும், இதற்குப் பின்னர் வலு விலைகளிற்கான முன்னர் கணிக்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவில் கீழ்நோக்கிய திருத்தங்கள், வலுவான நாணயம் மற்றும் உணவு விலைகளில் வீழ்ச்சி ஆகியவற்றால் உந்தப்பட்டு, பணவீக்கம் குறைவடைந்து 5 சதவீத இலக்கிற்குக் கீழான மட்டங்களை எட்டியது. இதன்விளைவாக, 2024 செத்தெம்பரில், முதன்மைப் பணவீக்கம் ஒன்பது ஆண்டுகளில் முதலாவது தடவையாக பணச்சுருக்க மட்டங்களை எட்டியது. அதேவேளை, பொருளாதாரத்தில் கேள்வி அழுத்தங்களை முக்கியமாகப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமும் தாழ்ந்தளவிலான நேர்மறையான மட்டங்களை எட்டியது.

**முதன்மைப் பணவீக்கத்தின் குறிப்பிடத்தக்க குறைவடைதல் மற்றும் அதன்பின்னரான பணச்சுருக்கம் என்பவற்றுடன், பணவீக்க இலக்கானது 2024இன் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளில் தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளிற்குத் தாழ்ந்தளவிலான எல்லையை மீறியது.** இத்தகைய பணவீக்க இலக்குத் தவறுகையானது 2024இன் இறுதிக் காலாண்டிலும் தொடர்ந்தது. இதற்கமைய, நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் உடன்பட்டவாறு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையொன்றினை கௌரவ நிதி அமைச்சரிடம் மத்திய வங்கி சமர்ப்பித்தது. இலக்கிலிருந்தான பணவீக்க விலகலிற்கான காரணங்கள், மேற்கொள்ளப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் மற்றும் பணவீக்க இலக்கு எய்தப்படக்கூடிய காலவரையறையின் ஒரு

மதிப்பீடு என்பவற்றினை இவ்வறிக்கை உள்ளடக்கின்றது. இவ்வறிக்கை பொதுமக்களுக்கும் கிடைப்பனவாக்கப்பட்டு இது **பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களிற்குமான மத்திய வங்கியின் பொறுப்புக்கூறலை மேலும் மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க மைல்கல்லொன்றினை எடுத்துக்காட்டுகின்றது.**

**2023இன் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்து பதிவுசெய்யப்பட்ட மீட்சியினைத் தொடர்ந்து தளத்தாக்கத்தில் இருந்து நன்மைபெற்றதன் பின்னர் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை மற்றும் தாழ்ந்தளவிலான பணவீக்கச் சூழல் என்பவற்றிலிருந்தும் ஆதரவளிக்கப்பட்டு இலங்கைப் பொருளாதாரமானது 2024இல் வலுவாக மீளெழுச்சியடைந்தது.** 2024இன் முதல் மூன்று காலாண்டுகளில், முக்கிய பொருளாதாரத் துறைகள் விரிவாக்கங்களைப் பதிவுசெய்ததுடன் பொருளாதாரமானது 5.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்து என மதிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார நடவடிக்கைகளின் உத்வேகத்தை அடிப்படையாகக்கொண்டு, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் முன்கூட்டிய பொருளாதாரக் குறிகாட்டிகள் 2024இன் இறுதிக் காலாண்டிலும் வெளியீடு விரிவாக்கத்தின் தொடர்ச்சியொன்றினைப் பிரதிபலிக்கின்றன. இதற்கமைய, உண்மை மொ.உ.உற்பத்தியானது 2024இல் ஏறத்தாழ 5.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளமையானது 2017இலிருந்தான மிகவும் உயர்ந்தளவிலான வருடாந்த வளர்ச்சியைப் பதிவுசெய்கின்றது. எதிர்பார்த்ததிலும் பார்க்க உயர்ந்தளவிலான இவ்வளர்ச்சியும் அண்மைய மாதங்களில் ஏற்பட்ட பணச்சுருக்கமானது கேள்விக் காரணிகளினால் ஏற்படவில்லையென்பதனையும், அது முக்கியமாக நிர்வாகரீதியிலான விலைச் சீராக்கங்கள் உள்ளடங்கலாக நிரம்பல் பக்கக் காரணிகளினால் ஏற்பட்டதென்பதனையும் சான்றுபகர்கின்றது.

**மிதமான பணவீக்கச் சூழல் மற்றும் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டின் படிப்படியான மீள்நிறுத்தல் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, மத்திய வங்கியின் நாணயக் கொள்கையானது 2024 ஆண்டு முழுவதிலும் மிகவும் தளர்வாக காணப்பட்டது.** இதற்கமைய, மத்திய வங்கி ஆண்டு காலப்பகுதியில் மூன்று சந்தர்ப்பங்களில் நாணயக் கொள்கையினைத் தளர்த்தி, சந்தை வட்டி வீதங்களில் கணிசமானளவிலான கீழ்நோக்கிய சீராக்கங்களை மேற்கொண்டதுடன் அதன்மூலம், பேரண்டப்பொருளாதாரத்திற்கு அத்தகைய கொள்கைத் தளர்த்தலின் பாரியளவிலான ஊடுகடத்தலை இயலச்செய்தது. உள்நாட்டு நாணயச் சந்தைத் திரவத்தன்மையானது 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிகையான மட்டங்களில் பரந்தளவில் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் குறுங்கால பணச் சந்தை வீதங்கள் நன்கு அளவையிடப்பட்ட சந்தைத் தொழிற்பாடுகளினால் ஆதரவளிக்கப்பட்டு நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் ஒத்திசைவாகப் பேணப்பட்டன. போதியளவிலான சந்தைத் திரவத்தன்மை மட்டங்களுடன் இணைந்து தாழ்ந்தளவிலான வட்டி வீதச் சூழல் பொருளாதாரம் அதன் மீட்சிக் கட்டத்தினூடாக முன்னேற்றமடைவதற்குத் துணைபுரிந்தது. இதற்கேற்க, இந்த சாதகமான நிலைமைகள் நுகர்வோர் செலவிடலை ஊக்குவித்ததுடன் முதலீடுகளை மேம்படுத்தி பொருளாதார மீட்சிக்கு அடித்தளத்தினை அமைத்தது.

**மத்திய வங்கி அதன் இரட்டைக் கொள்கை வட்டி வீத முறைமையிலிருந்து ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றிற்கு நகர்ந்தமையினால் 2024ஆம் ஆண்டானது நாணயக் கொள்கை வகுத்தலுக்கு இன்றியமையாததொன்றாகக் காணப்பட்டது.** 2024ஆம் ஆண்டிற்கான கொள்கை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, மத்திய வங்கி 2024 நவெம்பரில் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைச் சமிக்ஞை செய்யும் **"ஓரிரவுக் கொள்கை வீதத்தினை" நாணயக் கொள்கையின் முதன்மைக் கருவியாக** அறிமுகப்படுத்தியது.

**தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளினால் ஆதரவளிக்கப்பட்டு, தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது 2024இல் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்த வேளையில், அரச துறையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் சுருக்கமடைந்தமையானது தனியார் துறை முதலீட்டிற்கான நிதியியல் வளங்களின் கிடைப்பனவாந்தன்மையினையும் பிரதிபலிக்கின்றது.**

**வங்கித்தொழில் முறைமைக்குப் போதியளவிலான நாணயத்தாள்கள் மற்றும் நாணயக்குற்றிகளை வழங்குவதன் மூலம் நாணயத்திற்கான அதிகரித்தளவிலான கேள்வியினை மத்திய வங்கி வசதிப்படுத்தியது.** இது உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கு மத்தியில் கொடுக்கல்வாங்கல்கள் தடையின்றி மேற்கொள்ளப்படுவதனை நிச்சயப்படுத்தியது. 2024 ஆம் ஆண்டில், டிஜிட்டல் கொடுப்பனவுகளையும் பொதுமக்கள் மேற்கொள்ளும் வேகம் அதிகரித்தது. மேலும், இணையவழி கொடுப்பனவுத் தளம் மூலம் தங்கள் வங்கிக் கணக்குகளிலிருந்து நேரடியாக அரசு நிறுவனங்களுக்கு வாடிக்கையாளர்கள் செலுத்தும் தொகையும் 2024 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தை பதிவு செய்துள்ளது.

**வெளிநாட்டுத் துறையின் புதுப்பிக்கப்பட்ட தாங்கியிருக்கக்கூடியதன்மையினை அடிப்படையாகக் கொண்டு 2024இல் அதன் நேர்மறையான உத்வேகத்தினைத் தொடர்ந்தது.** சென்மதி நிலுவை நிலையானது வலுவடைந்ததுடன் நடைமுறைக் கணக்கானது 2024இலும் மிகையொன்றினைப் பதிவுசெய்திருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளமையானது இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளைக் கொண்ட மிகைகளின் வரலாற்றுரீதியிலான சாதனையொன்றினை எடுத்துக்காட்டுகின்றது. குறிப்பாக, மத்திய வங்கி **2024இல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து முன்னெப்பொழுதுமில்லாதளவு உயர்ந்தளவிலான வெளிநாட்டுச் செலாவணியினைக்** கொள்வனவு செய்ததுடன், **இது மொத்தமாக ஐ.அ.டொலர் 2.8 பில்லியனை (தேறிய) விஞ்சியது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்** 2023இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் **2024இன் இறுதியளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 6.1 பில்லியனிற்கு அதிகரித்தது.** மத்திய வங்கிச் சட்டத்தில் ஆணையிடப்பட்டவாறு, நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினைப் பூர்த்திசெய்யும் விதத்தில், நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கொள்கையினை 2024இல் தொடர்ந்தது. தேறிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மற்றும் மேம்பட்ட

சந்தை மனோபாவங்கள் என்பவற்றினால் உந்தப்பட்டு இலங்கை ரூபாயானது 2024இல் பெறுமதி உயர்வொன்றினைப் பதிவுசெய்து உயர்ந்த உறுதிப்பாட்டினையும் காண்பித்தது.

**நிதியியல் முறைமையானது தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையினைக் கொண்டிருந்தது.** நிதியியல் துறை மீதான பொருளாதார நெருக்கடியின் கசிவுத் தாக்கங்களின் படிப்படியான மறைவடைதலுடன், வங்கித்தொழில் துறையின் ஆற்றல்வாய்ந்த தன்மை ஆண்டுக் காலப்பகுதியில் மேம்பட்டுள்ளது. வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் (கொடுகடன்) தொடர்ந்து வளர்ச்சியடைந்த வேளையில், செயற்படாக் கடன் விகிதத்தின் குறைவினால் பிரதிபலிக்கப்பட்டவாறு ஆண்டுக் காலப்பகுதியில் துறையின் தவறுகை இடர்நேர்வானது வீழ்ச்சியடைந்தது. மேலும் துறையின் திரவத்தன்மை காப்பீடு விகிதம் குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக் காணப்பட்டது. வங்கித்தொழில் துறையின் பங்குரிமை மீதான வருவாய்கள் கணிசமானளவு மேம்பட்ட வேளையில் வங்கித்தொழில் துறையின் மூலதன போதுமாந்தன்மை விகிதம் 2024இல் மேம்பட்டு இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களை விட ஒழுங்குமுறை ரீதியான மூலதனத்தில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த வளர்ச்சியினைப் பிரதிபலிக்கின்றன. அதேவேளை, நிதிக் கம்பனிகள் துறையும் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களில் சாய்வான மீட்சியொன்றினைப் பதிவுசெய்த வேளையில், 2024இல் இலாபத்தன்மைக் குறிகாட்டிகள் மேம்பட்டன. பேரண்டநிதியியல் நிலைமைகள் மற்றும் சந்தை பங்கேற்பாளர்களின் நம்பிக்கை தொடர்ந்தும் மேம்பட்டதனால் நிதியியல் சந்தைகள் தாழ்ந்த அழுத்தத்துடன் செயற்பட்டன.

**நிதியியல் நிறுவனங்களின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கி நிதியியல் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை தொடர்ந்து வலுப்படுத்தியது. வங்கித்தொழில் (திருத்தம்) சட்டம்** மற்றும் திருத்தங்களை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதனை வசதிப்படுத்தும் பொருட்டு உரிமம்பெற்ற வங்கிகளுக்குத் தேவையான பணிப்புரைகளை வழங்குதல் என்பனவூடாக உரிமம்பெற்ற வங்கிகளின் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டது. இதற்கமைய, ஏனையவற்றிற்கிடையில், பாரியளவிலான வெளிப்படுத்துகைகள், கம்பனி ஆளுகை, திரவத்தன்மை விகிதங்கள், தொடர்புடைய தரப்புக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரங்கள் என்பன குறித்த வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன. மேலும், போதியளவில் மூலதனமாக்கப்பட்ட வங்கித்தொழில் முறைமையொன்றின் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை வலுப்படுத்தும் நோக்கொன்றுடன் ஒன்பது பாரிய உள்நாட்டு வங்கிகளை மறுசீரமைத்தல் மற்றும் மீள்மூலதனமாக்கலிற்கான வழிகாட்டலுடன் இசைந்து செல்லும் விதத்தில் மத்திய வங்கி **மீள்மூலதனமயமாக்கல் உபாயத்தினை உருவாக்கியது**. இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் நட்டஈட்டுக் கொடுப்பனவுப் பொறிமுறையின் செயற்றிறன் மற்றும் வினைத்திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்காக சகல உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை உள்ளடக்கும் பொருட்டு **வைப்பாளர் வாரியான தரவு சேமிக்கும் முறைமையும்** தொடங்கப்பட்டமையானது வைப்பாளர்

தகவல்களின் துல்லியமான, காலந்தவறாத மற்றும் நெறிப்படுத்தப்பட்ட முகாமைத்துவத்தினை நிச்சயப்படுத்துகின்றது.

**வங்கித்தொழில் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் தீர்மானக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதில் மத்திய வங்கி 2024இல் குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைந்தது.** இச்சாதனைகள் தீர்மானக் கொள்கை உருவாக்கம், தீர்மானத் திட்டமிடலுக்கான தரவு வடிவுப்படிவம் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பணிப்புரையின் வழங்கல், உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தீர்மான தூண்டலின் நிறுவல் மற்றும் **நிதியியல் உறுதிப்பாட்டு நிதியத்தின்** தொழிற்படுத்தல் என்பவையை உள்ளடக்கியது. 2024 ஒத்தோபரில், நிதியியல் உறுதிப்பாட்டு நிதியமானது ரூ. 500 மில்லியன் தொகையிலான பெயரளவு அரச ஒதுக்கீடொன்றுடன் தாபிக்கப்பட்டுள்ளது.

**அதேவேளை, நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு குறித்த ஒழுங்குவிதிகள் 2024 ஓகத்து தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் முழுமையாக தொழிற்படுத்தப்பட்டமையானது நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான மத்திய வங்கியின் முயற்சிகளில் குறிப்பிடத்தக்க மைல்கல்லொன்றினை எடுத்துக்காட்டுகின்றது.** 2024 காலப்பகுதியில், தடைசெய்யப்பட்ட நிதியியல் திட்டங்களுடன் தொடர்புடைய விடயங்களைக் கையாள்வதற்கான பொறுப்புக்கள மற்றும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் முழுமையான தொழிற்படுத்தல் என்பவை ஓர் தனிப்பயனுடைய திணைக்களத்திற்கு மாற்றப்பட்டன.

**ஆண்டு காலப்பகுதியில், இலங்கையில் வசிப்பவர்களினால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மற்றும் புலம்பெயர்ந்தோரினால் மேற்கொள்ளப்பட்ட மூலதன பரிமாற்றங்கள் என்பன குறித்து கட்டுப்பாடுகள் குறிப்பிடத்தக்களவு தளர்த்தப்பட்டன.** இக் கட்டுப்பாடுகள் 2020 தொடக்கம் நடைமுறையிலிருந்தன. அதேபோன்று, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு மீளனுப்பல் மற்றும் அவற்றை இலங்கை ரூபாவாக மாற்றுதல் என்பன தொடர்பில் விதிக்கப்பட்ட விதிமுறைகள் தளர்த்தப்பட்டன.

**2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிராந்திய மற்றும் நாடளாவிய ரீதியிலான கொடுப்பனவு வலையமைப்புக்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் தேசிய ரீதியிலான கொடுப்பனவு உட்கட்டமைப்பினை மத்திய வங்கி தொடர்ந்து மேம்படுத்தியது.** மேலும், இலங்கையின் கொடுப்பனவு உட்கட்டமைப்பானது பன்னாட்டு நியமங்களுடன் இணங்கிச் செல்வதனை நிச்சயப்படுத்தும் நோக்குடன், புதிய அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதன் மூலம் நியமப்படுத்தலிற்கான ஐஎஸ்ஓ 20022 நடைமுறைப்படுத்தல் திட்டமானது 2024இல் அதன் முதலாவது கட்டத்தினை நிறைவுசெய்தது. மேலும், பிரசை-அரசாங்க இடைத்தொடர்புகளை மேம்படுத்துவதனையும் இலங்கையில் பல்வேறு அரச பணிகளிற்கான கொடுப்பனவுச் செயன்முறைகளை நெறிப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்ட முயற்சியொன்றான அரசாங்க இலத்திரனியல் கொடுப்பனவுத் தளத்தினை உருவாக்குவதில் மத்திய வங்கி முக்கிய வகிபாகத்தினைக் கொண்டிருந்தது.

**இறை நீடித்துநிலைத்திருக்கின்றதன்மையை மீட்டெடுப்பதனை நோக்காகக்கொண்டு, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட திரட்சி வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு இறைத் துறைச் செயலாற்றம் 2024இல் தொடர்ந்து மேம்பட்டது.** ஆரம்ப மீதி மிகையொன்றினை அடைதல் உள்ளடங்கலாக அரசிறைச் சேகரிப்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் முக்கிய இறைக் குறிகாட்டிகளில் பரந்த அடிப்படையிலான முன்னேற்றங்கள் என்பவற்றுடன் இக்கொள்கைச் சீர்திருத்தங்கள் 2024இன் அரச நிதிகளில் பிரதிபலித்துள்ளன. மேலும், முக்கிய சேவைகளுக்கான செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் பொறிமுறைகள் உட்பட கட்டமைப்புசார் சீர்திருத்தங்களின் தொடர்ச்சியானது இறை மீதிகள் மற்றும் வங்கித்தொழில்துறை மீது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சுமையை குறைப்பதில் பாரியளவில் ஆதரவளித்துள்ளது. குறைவடைந்துவரும் சந்தை வட்டி வீதச் சூழலொன்றில் குறைந்தளவிலான இடர்நேர்வு மிகையுடன் இணைந்து மேம்பட்ட இறைச் செயலாற்றமானது அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்களைக் குறைப்பதற்குக் குறிப்பிடத்தக்களவு துணைபுரிந்ததுடன் அதன்மூலம், அரசிற்கான வட்டிச் செலவு குறைந்தது. மேலும், நாணயக் கொள்கையினைத் தளர்த்துவதற்கான மத்திய வங்கியின் முயற்சிகளுக்கு இறைத் திரட்சி வழிமுறைகள் துணைபுரிந்ததுடன் இது நாணயக் கொள்கை வகுத்தல் தொடர்பில் இறை முன்மதியின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

# 2025இற்கும் அதற்கு அப்பாலுக்குமான கொள்கைகள்

## 2. விலை உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்கும் கொள்கைகள்

***முக்கிய பண்புகள்***

- *நாணயக் கொள்கையின் கவனமானது பணவீக்கத்தினை ஏறத்தாழ 5 சதவீதத்தில் பேணுகின்ற அதேவேளையில் நீடித்திருக்கும் வளர்ச்சியை அடைவதனை நோக்கிய பாதையில் பொருளாதாரம் தொடர்ந்திருப்பதனை உறுதிப்படுத்துகின்றது*
- *2025 நடுப்பகுதியளவில் பணவீக்கம் நேர்க்கணிய எல்லைக்குத் திரும்பும்*
- *தனியார் துறைக் கொடுகடன் தொடர்ந்தும் விரிவான வேகத்தில் காணப்பட்டு பொருளாதாரச் செயற்பாட்டிற்கு ஆதரவளிக்கும்*
- *நிதியியல் நிறுவனங்களுடன் கூட்டிணைந்து தெரிவுசெய்யப்பட்ட உற்பத்திகள் மீதான அதிகப்படியான கடன் வட்டி வீதங்கள் குறைக்கப்படும்*
- *சேமிப்புகளை ஊக்குவிப்பதற்கான புத்துருவாக்க தீர்வுகளை அறிமுகப்படுத்துவதற்கான தேவை*
- *நாணயக் கொள்கை உருவாக்கத்திற்கான முன்னோக்கியப் பார்வை, தரவுகளின் தூண்டுதல் என்பனவற்றுக்கான மேலதிக முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன*
- *ஓரிரவு கொள்கை வீதத்துடன் ஒத்திசைந்ததாக குறுங்கால சந்தை வட்டி வீதங்கள் வழிநடத்தப்படும்*
- *திரவத்தன்மை எதிர்வுகூறல் கட்டமைப்பு மேம்படுத்தப்படும்*
- *நியதி ஒதுக்கு விகிதக் கட்டமைப்பு*
- *திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏல அட்டவணை அறிவிக்கப்படும்*
- *வெளிநாட்டுத் தாங்கிருப்புக்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.*
- *சந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு வழிகாட்டுவதற்கு அடிப்படை உடன் செலாவணி வீதம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது*
- *சாதாரண மக்களை அடைவதில் தொடர்பூட்டல் உபாயம் கவனம்செலுத்தும்*

### 2.1. நாணயக் கொள்கை மற்றும் தோற்றப்பாடு

இயல்புநிலை மீட்டெடுக்கப்பட்டமை மற்றும் நாணயக் கொள்கை உள்ளடங்கலாக, மிகவும் தேவைப்படும் ஆற்றல்வாய்ந்த பேரண்டபொருளாதாரக் கொள்கைகளின் நடைமுறைப்படுத்தலினூடாக அடையப்பெற்ற உறுதிப்பாடு போன்றவற்றுடன் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இணங்கும் விதத்தில், நடுத்தர காலப்பகுதியில் நிலைபெறத்தக்க வளர்ச்சியை அடைவதை நோக்கி பொருளாதாரம் காணப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்தும் அதேவேளை 5 சதவீதம் கொண்ட இலக்கைச் சுற்றி பணவீக்கத்தை நிலைப்படுத்துவது குறித்து மத்திய வங்கியின் முன்னோக்கிய கவனம் இருக்கும்.

மத்திய வங்கியின் தற்போதைய எறிவுகளின் பிரகாரம், நிரம்பல் பக்க விலைச் சீராக்கங்களின் ஒருமுறை நிகழும் தாக்கங்களின் விளைவாக ஏற்படும் பணச்சுருக்க சூழல் 2025இன் தொடக்கப்பகுதியிலும் தொடர்ந்து காணப்படும். எனினும், மறைவடைந்துவரும்

நிரம்பல் பக்க காரணிகளின் விளைவுகள் மற்றும் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையின் மூலம் உருவாக்கப்பட்ட தளர்வான நிலைமைகள் என்பவற்றுடன் ஆண்டின் பின்னரைப்பகுதியில் பணவீக்கம் இலக்கை நோக்கி நகருமென எறிவுசெய்யப்படுகின்றது. அதுவரையான காலப்பகுதியில், மத்திய வங்கியின் நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புகூறும் தன்மையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு, பணவீக்க இலக்கு தவறியதற்கான காரணத்தை, இலக்கிற்கு கீழாக காணப்பட்டபோதிலும், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் வேண்டப்பட்டவாறு அனைத்தையுமுள்ளடக்கிய அறிக்கைகளை மத்திய வங்கி தொடர்ந்தும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும். 2020ஆம் ஆண்டின் பிற்பகுதி தொடக்கம் 2023ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதி வரையிலான உயர்ந்தளவான பணவீக்க அத்தியாயத்தைத் தொடர்ந்து, இத்தற்காலிக பணச்சுருக்க காலப்பகுதி, வாழ்வாதார செலவைக் குறிப்பிட்ட அளவிற்கு குறைப்பதன் மூலம் பொது மக்களுக்கு சிறிதளவு நிவாரணமளிக்குமென நாம் நம்புகிறோம்.

நிலவிவரும் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் மேம்பட்டுவரும் தொழில் மற்றும் முதலீட்டாளர் மனோபாவங்கள் என்பவற்றினால் துணையளிக்கப்பட்டு, 2024ஆம் ஆண்டில் தனியார் துறைக்கான கொடுகடனில் அவதானிக்கப்பட்ட பரந்தளவிலான மீட்சியானது எதிர்வரும் காலத்திலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன் இயலாற்றலை மேம்படுத்தி, அதன்மூலம் உள்நாட்டு பொருளாதார விரிவடைதலுக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு விலை உறுதிப்பாட்டைப் பேணுவதில் காணப்படும் சாத்தியமான இடர்நேர்வுகள் மற்றும் பாதிப்புக்களை உரிய நேரத்தில் இனங்கண்டு அவற்றை தணிப்பதை உறுதிசெய்வதற்கு மத்திய வங்கியானது கடன் மற்றும் அத்துடன் தொடர்புயை இயக்கவாற்றல்களிலுள்ள முன்னேற்றங்களை தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானிக்கும். உரிய நேரத்திலான நாணயக் கொள்கை தலையீடு வட்டி வீதங்களில் ஏற்படும் உயர்ந்தளவிலான மாற்றங்களை தடுத்து, சவால்மிக்க சூழ்நிலைகளிலிருந்து பொருளாதாரத்தினை வழிநடாத்துவதற்கு தளத்தை அமைக்கும் அதேவேளை, பொருளாதாரத்தை அதன் உள்ளார்ந்த ஆற்றலை அடைவதற்கு வசதிப்படுத்தும்.

சந்தை கடன்வழங்கல் வீதங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பின் மூலம் தனியார் துறைக்கான கொடுகடன் மீட்சி ஆதரவளிக்கப்பட்டு வருகின்றது. எனினும், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அதேபோன்று சிறியளவிலான கடன்பாட்டாளர்கள் மற்றும் குறிப்பிட்ட கொடுகடன் சாதனங்கள் என்பவற்றுக்கான விரிவாக்கப்பட்ட வசதிகளில் சில அதிகப்படியான வெளிப்புற வட்டி வீதங்களை மத்திய வங்கி அவதானிக்கின்றது. இது நடைமுறையிலுள்ள தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலைப்பாட்டுடன் இணங்கி காணப்படவில்லை. மேலும், பொருளாதாரத்தில் காணப்படும் ஒட்டுமொத்த உறுதிப்பாடு மற்றும் மீட்பை கருத்திற்கொண்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கடனுக்கான நாட்டம் மேம்படுகின்ற அதேவேளை கடன்வழங்குதலுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. ஆகையினால், குறைந்தளவான வட்டி வீதத்தில் கொடுகடனை கிடைக்கச்செய்யும் நோக்கில், மத்திய வங்கியானது சந்தையில் இன்னும் நிலவும்

அதிகப்படியான வட்டி வீதங்களைக் குறைக்கும் வகையில் வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றும்.

குறைந்தளவிலான வட்டி வீதங்கள் கடனை மீட்டெடுப்பதற்கு உதவியதுடன் ஒட்டுமொத்த தொழில் மனோபாவத்தையும் மேம்படுத்துவதற்கு பங்களித்து இருப்பினும், இவை சேமிப்பாளர்களை விகிதாசாரமற்றளவில் பாதிக்கலாம். எனினும், உயர்ந்தளவிலானப் பணவீக்க அத்தியாயத்தை போலன்றி, பணவீக்கம் வெற்றிகரமாக குறைந்தளவில் கட்டுப்படுத்தப்பட்டதுடன், வைப்புத்தொகைகள் மீதான உண்மையான வருவாய்கள் நேர்மறையாகக் காணப்படுகின்றன. வட்டி வீதங்கள் தமது சுழற்சிகளைக் கொண்டுள்ளதுடன், மேலும் ஒட்டுமொத்த பொதுமக்கள் நலனை மேம்படுத்தும் நோக்குடன், பணவீக்கம் குறைந்தளவிலும் நிலையாகவும் பேணப்படுவதை உறுதிசெய்வதற்கு மத்திய வங்கி வட்டி வீதங்களை கவனமாக கையாளும். இவ் அபிவிருத்திகளுக்கு மத்தியில், குறைந்த வட்டி வீதச் சூழலில் உள்நாட்டு சேமிப்புகள் ஊக்குவிக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக துரிதமாக முதிர்ச்சியடையும் சனத்தொகையின் பின்னணியில் சேமிப்பை அதிகரிப்பதற்கு புத்தாக்கமிக்க தீர்வுகள் மற்றும் சாதனங்கள் அறிமுகப்படுத்துவதற்கு நிதியியல் துறை ஊக்குவிக்கப்படுகின்ற அதேவேளை வணிக சுழற்சி காலப்பகுதியில் வட்டி வீத தளம்பல்களை ஈடுசெய்வதற்கு திரவத்தன்மை மற்றும் பாதுகாப்பின் கூறுகளையும் உள்ளடக்குகின்றது. மேலும், வாழ்க்கையின் ஆரம்பக்கட்டத்தில் சேமிக்கும் கலாச்சாரம் வளர்க்கப்பட வேண்டும். இது நீண்ட கால சேமிப்புகளை மேம்படுத்துவது மாத்திரமின்றி ஓய்வுக்குப்பின்னர் மேம்பட்ட வாழ்க்கைக்கான பாரிய நிதியியல் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும்.

மத்திய வங்கியானது நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழான கொள்கை வகுத்தலின் முக்கிய அம்சமாக காணப்படுகின்ற நாணயக் கொள்கை உருவாக்கத்திற்கு முன்னோக்கிய, தரவு சார்ந்த அணுகுமுறையொன்றைப் பின்பற்றுகின்றது. **ஏற்கனவேயுள்ள பேரண்டபொருளாதார எதிர்வுகூறல்களை உருவாக்கும் மாதிரிகளை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை அம்முயற்சிகளை நிறைவுசெய்வதற்கான பதிலீட்டு மாதிரிகள் மற்றும் கட்டமைப்புகளின் மதிப்பீடு தொடர்ந்து சமமாக இடம்பெறும்.** இதற்குமேலதிகமாக, **நிறுவனத்தினுள் கொள்கை ஆய்வினை மேம்படுத்துதல் மற்றும் ஆய்வு கலாசாரத்தை வளர்த்தல் என்பன முன்னுரிமைகளாக காணப்படும்.** தொழில்நுட்ப இயலாற்றலை மேம்படுத்துவதற்கான இம்முயற்சிகள் நவீன தொழிநுட்பத்தினால் உதவப்படும் உயர் தரத்திலான பகுப்பாய்வுகள் மற்றும் சிறந்த தரவு சேகரிப்பு மற்றும் எதிர்வுகூறல் இயலாற்றல்களின் மூலமாக நாணயக் கொள்கை தீர்மானத்தை மேற்கொள்ளும் செயன்முறைக்கு சிறப்பாக ஆதரவு வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், **குறுகிய கால எதிர்வுகூறலை மேம்படுத்தவதற்கு உயர் அதிர்வெண்ணைக் கொண்ட தரவுகளின் புதிய மூலங்களை ஆராய்வதன் மூலம்** கொள்கைப் பகுப்பாய்விற்காக பயன்படுத்தப்படும் அதன் தரவுத் தொகுதியை மத்திய வங்கி விரிவுபடுத்தும் அதேவேளை மத்திய வங்கியினால் நடாத்தப்படும் அளவீட்டு உள்ளடக்கத்தை மேலும் மேம்படுத்தும்.

## 2.2. நாணயக் கொள்கையின் நடைமுறைப்படுத்தல்

ஓரிரவு கொள்கை வீதத்தினூடாக அறிவிக்கப்பட்ட மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில் குறுங்கால சந்தை வட்டி வீதங்களை வழிநடத்தும் நோக்குடன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்படும். ஏற்கனவே எதிர்கொண்டவாறு, ஓரிரவு கொள்கை வீதத்தின் அறிமுகம் மற்றும் சமகாலத்திலான நாணயக் கொள்கைத் தளர்த்தல் என்பவற்றுடன், குறுங்கால சந்தை வட்டி வீதங்கள் குறிப்பாக, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம், ஓரிரவு கொள்கை வீதத்துடன் தொடர்ந்தும் ஒத்திசைந்து காணப்பட்டது. 2025ஆம் ஆண்டிற்கான பல்வேறு வழிமுறைகள் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் செயற்றிறனை மேம்படுத்தும் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ளன.

மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில் உள்நாட்டுப் பணச் சந்தையிலுள்ள திரவத்தன்மையினைத் தொடர்ந்தும் முகாமைசெய்யும். வெளிநாட்டு ஒதுக்குகளின் எதிர்பார்க்கப்படும் கட்டியெழுப்பலுடன் உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மையானது 2025இல் படிப்படியாக அதிகரிக்கக்கூடுமென்பதுடன் **பொருத்தமான நாணயத் தொழிற்பாடுகளினூடாக திரவத்தன்மையினை தேவைக்கேற்ப முகாமைசெய்வதற்கு மத்திய வங்கி தயார்நிலையில் இருக்கும்**. அதேவேளை, மத்திய வங்கி அதன் மறுசீரமைக்கப்பட்ட முறிகளின் கையிருப்பினைப் படிப்படியாக நிறுத்துவதற்குரிய வழிமுறைகளை ஆராயுமென்பதுடன், இது நெருக்கடிக் காலப்பகுதியில் அரசாங்கத்திற்கான மத்திய வங்கியின் நிதியியல் ஆதரவினை எடுத்துக்காட்டும் விதத்தில் வழிவழியாகப் பின்பற்றப்படும் பாரம்பரியமொன்றாகக் காணப்படுகின்றது.

நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு மற்றும் பன்னாட்டுரீதியிலான சிறந்த நடைமுறைகள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் **தற்போதைய நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டுக் கட்டமைப்பினை மீளாய்வுசெய்கின்ற செயன்முறையில் மத்திய வங்கி ஈடுபட்டுள்ளது.** ஒட்டுமொத்த நிதியியல் முறைமை மற்றும் பரந்தளவிலான பொருளாதாரம் என்பவற்றின் நலனுக்காக நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டுக் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கான ஆர்வலர்களின் ஆலோசனைகளைத் தொடர்ந்து தேவையான மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

மேலும், ஒற்றை கொள்கை வட்டி வீதப் பொறிமுறையின் கீழ் நாணயக் கொள்கையை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதற்கும் வளர்ச்சியடைந்து வருகின்ற உள்நாட்டு மற்றும் உலகளாவிய அபிவிருத்திகளைத் தழுவிக்கொள்வதற்குமான நோக்கொன்றுடன் **2025இல் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளிற்கான அதிகளவிலான சந்தை நேய முறைமையொன்றிற்கு** மாறுதலடைவதற்கு மத்திய வங்கி திட்டமிடுகின்றது. இதற்கமைய, சந்தைப் பங்கேற்பாளர்களிடையே திரவத்தன்மை முகாமைத்துவம் குறித்த நிச்சயத்தன்மையினை உருவாக்குவதற்கு **திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏல அட்டவணையொன்று** இவ்வருடத்தில் அறிவிக்கப்படுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது. மேலும், **பணச் சந்தைத் திரவத்தன்மையை முகாமை செய்வதற்கான மாதிரி அடிப்படையிலமைந்த**

**அணுகுமுறையொன்றினூடாகத் திரவத்தன்மை எதிர்வுகூறல் கட்டமைப்பினை மேம்படுத்துவதனை** மத்திய வங்கி உறுதிப்படுத்தும்.

மேலும், 2025 ஆம் ஆண்டில், திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் துணைநில் வசதிகளின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கத்திற்காக **நாணயக் கொள்கை தொழிற்பாடுகளின் தகுதியான எதிர்தரப்பினர்களை மீளாய்வு செய்து நெறிப்படுத்த** மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது.

நியதி தேவைப்பாடு மற்றும் கடந்த கால நடைமுறைகள் என்பவற்றிற்கிணங்க, 2025ஆம் ஆண்டிற்கான முன்கூட்டி வெளியிடப்படும் நாணயக்கொள்கை நாட்காட்டி இத்தால் வெளியிடப்படுகிறது.

**முன்கூட்டி வெளியிடப்படும் நாணயக் கொள்கை நாட்காட்டி: 2025**

| சுழற்சி இலக்கம் | நாணயக் கொள்கைச் சபைக் கூட்டம் | நாணயக் கொள்கை அறிவிப்பு |
|---|---|---|
| 1 | சனவரி 28 | **சனவரி 29**<br>***நாணயக் கொள்கை அறிக்கை – பெப்புருவரி 15*** |
| 2 | மாச்சு 25 | **மாச்சு 26** |
| 3 | மே 27 | **மே 28** |
| 4 | யூலை 22 | **யூலை 23**<br>***நாணயக் கொள்கை அறிக்கை – ஓகத்து 15*** |
| 5 | செத்தெம்பர் 23 | **செத்தெம்பர் 24** |
| 6 | நவெம்பர் 25 | **நவெம்பர் 26** |

## 2.3. வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துடன் இணைந்து அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பின் நிறைவடையும்தருவாயானது முதலீட்டாளர் நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் வெளிநாட்டுத் துறையின் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கும் திடமானதோர் அடித்தளத்தை உருவாக்கியுள்ளது. இவ்வகையில், மத்திய வங்கி காலந்தவறாததொரு முறையில் பொருத்தமான கொள்கைகளை

ஆதரவளிக்கும் பொருட்டு வெளிநாட்டுத் துறை மீதான அபிவிருத்திகள் மற்றும் இடர்நேர்வுகளை உன்னிப்பாக அவதானிக்கும்.

2023 மற்றும் 2024இல் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளாக நடைமுறைக் கணக்கு மிகையொன்றினை இலங்கையால் பதிவுசெய்ய முடிந்தது. எனினும், பொருளாதார நடவடிக்கைகள் மீளெழுச்சியடைவதனால், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கானது 2025இல் பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்யக்கூடும். வெளிநாட்டு நடைமுறைக் கணக்கினை நடுத்தர காலத்தில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மட்டங்களில் பேணுவது இலங்கைக்கு அத்தியாவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. குறிப்பாக, 2025இல் அரசாங்கத்தின் மூலமான வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் திட்டமிடப்பட்ட தளர்வின் காரணமாக இறக்குமதிச் செலவினத்தில் படிப்படியான மீட்சியொன்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கானது பணிகள் வர்த்தகத்திலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்படுமென்பதுடன் இவை வரலாற்றுரீதியிலான உயர் மட்டங்களை எட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டுத் துறையில் நீண்டகால உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான பயணமானது சீர்திருத்தங்களை அமல்படுத்துவதனை நிச்சயப்படுத்துவதற்கும் ஒட்டுமொத்த பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை ஊக்குவிப்பதற்கும் **நடைபெற்றுவரும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின்** அடிப்படையில் கட்டமைக்கப்படும். வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்வதன் மூலம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் **வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களை மீள்கட்டியெழுப்புவதற்காக** மத்திய வங்கி தொடர்ந்தும் முயற்சியெடுக்கும். இத்தகைய வெளிப்புற தாங்கிருப்புகளின் உருவாக்கமானது வணிகப்பொருட்கள், மற்றும் பணிகள் ஏற்றுமதிகள், தொழிலாளர் பணவனுப்பல்கள், மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு போன்றவற்றிலிருந்து அதிகரிக்கப்பட்ட வருவாய்களின் மூலம் நாட்டிற்கு போதியளவு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை இயலுமைப்படுத்தும். மேலும், ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் குறிக்கோளுடன், **மேம்படுத்தப்பட்ட சொத்துப்பட்டியல் முகாமைத்துவ உபாயங்களுடன் புதிய முதலீடொன்றை நிறுவுதல்** போன்ற சந்தைகளில் காணப்படும் பல்வேறு பன்முக உபாயங்களின் மூலம் சந்தை வாய்ப்புகளை மூலதனமயமாக்குவதற்கு மத்திய வங்கி உத்தேசித்துள்ளது. முதலீடுசெய்யப்பட்ட வெளிநாட்டு ஒதுக்குகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு இடர்நேர்வுத் தணிக்கை அம்சங்களை வலுப்படுத்துவது தொடர்பில் உரிய கவனம்செலுத்தப்படும்.

அதன் ஆணையுடன் இசைந்து செல்லும் விதத்தில், மத்திய வங்கி ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதனையும் செலாவணி வீதத்தில் விஞ்சியளவிலான தளம்பலினைத் தணிப்பதனையும் நோக்காகக் கொண்ட வரையறுக்கப்பட்ட தலையீடுகளுடன் **வெளிநாட்டு அதிர்வுகளுக்கெதிரான தாங்கியிருப்பொன்றாகத் தொழிற்படுவதற்கு சந்தையினால் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதமொன்றினைப் பேணுவதற்கும்** உறுதிபூண்டுள்ளது. இந்நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக்

கட்டமைப்பானது அதிக போட்டித்தன்மையினையும் திரவ வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையொன்றினையும் மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கி ஓர் ஆழமான, வெளிப்படையான மற்றும் மேலதிக திரவத்தன்மையுடனான வெளிநாட்டு செலாவணி சந்தையை மேம்படுத்துவதற்கும், செலாவணி வீத இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்வதற்கு போதுமான முறைமைகளை உருவாக்கவும் **உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தைப் பங்கேற்பாளர்களையும் பொதுமக்களையும் வழிகாட்டுவதற்கான பிரதிபலிப்பு வீதமொன்றாக அடிப்படை உடனடிச் செலாவணி வீதமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு** மத்திய வங்கி முயற்சிக்கின்றது.

மத்திய வங்கி 2023இல் **பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினை** வெற்றிகரமாகத் தொழிற்படுத்தியதுடன் 2024 சனவரியிலிருந்து பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமைத் தரவுகளின் அடிப்படையிலமைந்த பணிகளின் வர்த்தகம் குறித்த மாதாந்த புள்ளிவிபரங்களை வெளியிடத் தொடங்கியது. இது வெளிநாட்டுத் துறைப் புள்ளிவிபரங்களின் துல்லியத்தன்மையினையும் உள்ளடக்கத்தினையும் மேம்படுத்தி, அதன்மூலம் நாட்டின் உள்ளாற்றலினைப் எய்துவதற்கான கொள்கை உருவாக்கத்தினை வசதிப்படுத்தும். தரவுத் தரம் மற்றும் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு உள்ளடக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்கும் வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களுடன் தொடர்புடைய கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் திட்டமிடல் என்பவற்றை வசதிப்படுத்துவதற்கும் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையினைப் பயன்படுத்துவதற்கு மத்திய வங்கி திட்டமிடுகின்றது.

## 3. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை நோக்காகக் கொண்ட கொள்கைகள்

***முக்கிய பண்புகள்***

- *அனைத்து வங்கிகளுக்கும் குறைந்தபட்சத் மூலதனத் தேவைப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதிசெய்வதற்கு வங்கி மீள்மூலதனமயமாக்கல் உபாயத்தின் மூலம் தொடர்ந்து கண்காணிப்பினை மேற்கொள்ளுதல்*
- *போதியளவு மூலதனத்துடன் வலுவானதும் தாக்குப்பிடிக்கக்கூடியதுமான வங்கிகளை உறுதிசெய்வதற்கான உரிமம்பெற்ற வங்கிகளின் சந்தையினால் தூண்டப்பட்ட ஒருங்கிணைப்பிற்கான கட்டமைப்பு*
- *வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தல்*
- *கரைகடந்த வங்கித்தொழிலை கொண்டுநடாத்துவதை வசதிப்படுத்தும் பொருட்டு கொழும்பு துறைமுறை நகர பொருளாதார ஆணைக்குழுவுடன் கூட்டிணைதல்*
- *நிதிக் கம்பனிகளை ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத் திட்டத்தின் கட்டம் IIஇனை நடைமுறைப்படுத்தல்*
- *நிதித்தொழில் சட்டம் மற்றும் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டம் என்பவற்றுக்கான திருத்தங்களை அறிமுகப்படுத்தல்*
- *உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் மூலதனத் தாங்கிருப்புக்களை அறிவிப்பதுடன் முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த நிதிக் கம்பனிகளை அடையாளங்காணுதல்*
- *இலங்கைக்கான நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் - பதிப்புரு 2.0 தொடங்கிவைத்தல்*
- *பொருத்தமான பேரண்ட முன்மதியுடைய கருவிகளைப் பயன்படுத்துவதனூடான வங்கித்தொழில் துறைக் கொடுகடனின் மேற்பார்வையினை வலுப்படுத்தல்*
- *பல்வேறு துணைச் சட்டவாக்கங்களுடன் இணைந்து கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தினை திருத்தம்செய்தல்*
- *அரசாங்க டிஜிட்டல் கொடுப்பனவுத் தளத்தைத் தொழிற்படுத்தல்*
- *நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுடன் இணங்கும் வகையில் சந்தை நடத்தைக்கான மேற்பார்வையினை விரிவுபடுத்தல்*
- *வாடிக்கையாளர்களுக்குத் தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயலச்செய்யும் வகையில் முக்கிய நிதியியல் தகவல்களை காட்சிபடுத்தல்*

### 3.1. வங்கித்தொழில் துறைக் கொள்கைகள்

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பாதுகாக்கும் மற்றும் வங்கித்தொழில் துறையின் தொழிற்பாட்டின் தாக்குபிடிக்கும் தன்மையை வலுப்படுத்தும் நோக்குடன், மத்திய வங்கியானது அண்மைக்காலம் முதல் நடுத்தரகாலம் வரையிலான கொள்கை நடவடிக்கைகளின் அணிவரிசையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது. ஒன்பது பாரிய உள்நாட்டு வங்கிகளின் மீள்கட்டமைப்பு மற்றும் மீள்மூலதனமயமாக்கலுக்கான வழிகாட்டுதலுக்கமைவாக, போதுமான

மூலதனமயப்படுத்தப்பட்ட வங்கித்தொழில் முறைமையினூடாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்கு **வங்கி மீள்மூலதனமயமாக்கல் உபாயத்தை மத்திய வங்கி உருவாக்கியுள்ளது.** இவ் உபாயத்தின் கீழ், இவ்வங்கிகள் சபையினால் அனுமதிக்கப்பட்ட திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளதுடன் **அனைத்து வங்கிகளும் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்குவதை உறுதிசெய்வதற்காக தற்போது இடம்பெற்றுவரும் மேற்பார்வையுடன்,** இம்மீள்மூலதனத் திட்டங்களின் செயற்பாட்டின் முன்னேற்றம் அரையாண்டு தோறும் கண்காணிக்கப்படும். மேலும், நிதியியல் முறைமை போதுமான மூலதனத்துடன் கூடிய வலுவான மற்றும் தாக்குபிடிக்கக்கூடியதன்மையுடான வங்கிகளை உள்ளடக்கியிருப்பதை உறுதி செய்வதற்காக, **உரிமம்பெற்ற வங்கிகளின் சந்தை தூண்டுதல் ஒருங்கிணைப்புக்கான கட்டமைப்பொன்று உருவாக்கப்படுவதுடன்** ஒவ்வொரு விடயங்களாக ஆராய்ந்து ஒருங்கிணைப்பிற்கு வசதியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாரிய வெளிப்பாடு, கம்பனி ஆளுகை, திரவத்தன்மை விகிதங்கள், தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் போன்ற விடயப்பரப்புகளை உள்ளடக்கிய **வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின்** கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் நடைமுறைப்படுத்தல் 2025ஆம் ஆண்டில் கண்காணிக்கப்படும். ஒழுங்குமுறை கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்யும் முகமாக தற்போதுள்ள ஒழுங்குமுறைகள், **சந்தை அபிவிருத்திகள் மற்றும் சிறந்த பன்னாட்டு நடைமுறைகள்** போன்றவற்றிகேற்ப மீளாய்வு செய்யப்படும்.

தேவையான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செயற்பாடுகளூடாக **கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் நடைபெறுவதை வசதிப்படுத்துவதற்கு** கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுடன் மத்திய வங்கி ஒன்றிணைந்து செயற்படும்.

மேலும், **மேம்படுத்தப்பட்ட நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் தீர்வு வழிமுறைகளூடாக** நிதியியல் முறைமையின் தாக்குபிடிக்கும் தன்மையும் வலுப்படுத்தப்படும். மத்திய வங்கியானது நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவின் தொழிற்பாடுகளைத் தடையின்றி தொடர்ந்து செல்லும் விதத்தில் ஒருங்கிணைத்து உதவிசெய்யும். மேற்பார்வை உட்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் இடர்நேர்வு அடிப்படையிலான மேற்பார்வையின் செயற்றிறன் மேம்படுத்தப்படுவதுடன் வங்கிகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு தீவிரப்படுத்தப்படும்.

நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் மற்றும் நிதியியல் நடவடிக்கை பணிக்குழுவின் பரிந்துரைகள் போன்றவற்றின் பிரகாரம், **பணம் தூயதாக்கலுக்கெதிராக மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான இடர்நேர்வு அடிப்படையிலான** பரீட்சிப்புகளை நடத்துவதை மத்திய வங்கி மேலும் வலுப்படுத்தும்.

### 3.2. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறைக் கொள்கைகள்

ஆரம்பத்தில் 2020ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையினை ஒருங்கிணைக்கும் முதன்மைத் திட்டம் எனப் பெயரிடப்பட்ட **நிதிக் கம்பனிகளை ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத் திட்டத்தின்** நடைமுறைப்படுத்தலுடன் இணைந்து **ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலை வலுப்படுத்துவதன மூலம்** வங்கியல்லா நிதியியல் துறையினைப் பாதுகாப்பதற்கு மத்திய வங்கி அர்ப்பணிப்புடன் உள்ளது. இம்முதன்மைத் திட்டமானது வலுவானதும் நிலையானதுமான வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளதுடன் இரு கட்டங்களை உள்ளடக்குகின்றது. **கட்டம் I இன் கீழ், எட்டு ஒருங்கிணைப்பு கொடுக்கல்வாங்கல்கள் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டன.**

2025 மார்ச் 31 தொடக்கம் 2028 மார்ச் 31 வரையிலான நீடித்த மூன்று ஆண்டுகள் செயற்படுத்தும் காலத்துடன் **முதன்மைத் திட்டத்தின் மீள்திருத்தப்பட்ட கட்டம் II 2024 திசெம்பரில் அறிவிக்கப்பட்டது. முதன்மைத் திட்டத்தின் கட்டம் II, தனித்த அடிப்படையில் தொடரும் நோக்குடைய நிதியியல் கம்பனிகளின் தாக்குப்பிடிக்கும்தன்மையை மேம்படுத்துவதில் கவனம்செலுத்துகின்றது.** கட்டம் II இன் கீழ் நிறுவப்பட்ட வரையறைகளை நிறைவேற்றுவதில், வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தவதை உறுதிசெய்வதற்கு இந்நிதியியல் கம்பனிகளின் முன்னேற்றம் கண்காணிக்கப்படும்.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையில் காணப்படும் அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையை வலுப்படுத்துவதற்கும் இடர்நேர்வு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதற்கும், **2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம்** என்பனவற்றுக்கு **திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.** ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை விரிவுபடுத்தி, அதன்மூலம் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் துறையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்தப்படுவதற்கு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் வழங்கப்படவுள்ளன. இதற்குமேலதிகமாக, நிதிக் கம்பனிகளின் செயலாற்றம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு பொதுமக்களின் வெளிப்படுத்துகைகளை மேம்படுத்தும் அதேவேளை மேற்பார்வை செயன்முறையின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கு தன்னியக்கப்படுத்தல் முறை பின்பற்றப்படும்.

### 3.3. பேரண்ட முன்மதியுடைய கொள்கைகள்

**நாட்டின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக விளங்கும் மத்திய வங்கி வங்கியின் பேரண்ட முன்மதியுடைய அணுகுமுறையின் மேம்படுத்தப்பட்ட தொடர்பூட்டலின் மூலம் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கான படிமுறையாக பேரண்ட முன்மதியுடைய கொள்கை கட்டமைப்பை வெளியிட்டது.**

மேம்படுத்தப்பட்ட முறைமைசார்ந்த இடர்நேர்வு கண்காணிப்பின் மூலம் மத்திய வங்கி அதன் பேரண்ட முன்மதியுடைய அணுகுமுறையை வலுப்படுத்தியது. இது தொடர்பில், பல்வேறு பேரண்ட நிதியியல் அழுத்த நிகழ்வுகளுக்கான உணர்திறனை சிறப்பாக மதிப்பிடுவதற்கு அழுத்த பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுகளின் கட்டமைப்புகள் என்பன மேலும் மேம்படுத்தப்பட்டு, அதன்மூலம் நிதியியல் முறைமையின் அபிவிருத்திகளையும் இடர்நேர்வுகளையும் கண்காணித்தல் வலுப்படுத்தப்பட்டது. **மத்திய வங்கியானது 2025ஆம் ஆண்டில் நிதிக் கம்பனிகள் துறைக்கான அதன் அழுத்தப் பரிசோதனை கட்டமைப்புகளை விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.**

மேலும், தேவைப்படும் மூலதன தாங்கிருப்புகளுடன் **உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் மீள்மதிப்பீடு** நிறைவுசெய்யப்பட்டுள்ளது. தொடர்புடைய உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் மூலதனத் தாங்கிருப்புகளுடனான உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் அறிவிப்பு 2025ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னோக்கிப் பார்க்கையில், மத்திய வங்கியானது நிதியியல் துறையின் தாக்குபிடிக்கும் தன்மையையும் மேற்பார்வையையும் வலுப்படுத்துவதற்கு **முறைமைசார் முக்கியத்துவமிக்க நிதிக் கம்பனிகளை இனங்காண்பதில்** கவனம் செலுத்துகிறது.

வங்கித்தொழில் துறையின் கொடுகடன் மீதான மேற்பார்வையை வலுப்படுத்தவதற்கு, பொருத்தமான பேரண்டமுன்மதியுடைய கருவிகளைப் பயன்படுத்தவதன் மூலம் இலக்கிடப்பட்ட கொள்கை அணுகுமுறை பயன்படுத்தப்படும். இது கடன்வழங்கும் நிறுவனங்களிடையே இடர்நேர்வு முகாமைத்துவத்தை மேம்படுத்தி நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும்.

நாட்டின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக, **நிதியியல் முறைமையின் மேற்பார்வை குழுவின் மூலம் வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் வரம்பிற்கு வெளியே நிதியியல் துறை பங்கேற்பாளர்களுக்கு மத்திய வங்கி அதன் பேரண்டமுன்மதியுடைய அணுகுமுறையை விரிவாக்கியுள்ளது.** இதன்மூலம் மத்திய வங்கி, அனைத்து நிதியியல் துறை ஒழுங்குபடுத்துநர்களையும் ஒரு கூடையின் கீழ் கொண்டுவந்துள்ளது. பேரண்ட முன்மதியுடைய மேற்பார்வையை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள், நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மூலம் மேம்படுத்தப்பட்ட தரவு சேகரிப்பையும் உள்ளடக்கும்.

நிதியியல் உறுதிப்பாட்டை உறுதிசெய்வதற்காக மத்திய வங்கி பரந்த அளவிலான கொள்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் நிதியியல் முறைமையின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய கொள்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. பொருளாதாரம் மீண்டு வருவதுடன் கொடுகடன் சுழற்சி விரிவாக்க கட்டத்தில் நகருவதனால், உயர்ந்தளவான இடர்நேர்வினை எடுத்துக்கொள்ளுதல் மற்றும், அதிகரித்த அளவிற்குமிஞ்சிய ஆர்வத்தினாலும் பாதிப்புகள் ஏற்படலாம். எனவே, மத்திய வங்கி முறைமைசார் இடர்நேர்வுகளை மிகுந்தகவனத்துடன் கண்காணித்து, தொடர்ந்து நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்காக ஏதேனும் தோற்றம்பெறும்

இடர்நேர்வுகளை நிவர்த்திசெய்வதற்கு பொருத்தமான பேரண்ட முன்மதியுடைய மற்றும் நுண் முன்மதியுடைய கொள்கை நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தும்.

### 3.4. நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியின் கீழான முன்னெடுப்புக்கள்

முக்கியமான முன்னெடுப்பொன்றாக, வளர்ச்சியடைந்து வருகின்ற உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிலைமைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் **இலங்கைக்கான நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதி வழிகாட்டல் - பதிப்புரு 2.0ஆனது** 2025இல் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளதுடன் நாட்டில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதி நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கான காலந்தவறாத வழிகாட்டுதலொன்றினை வழங்கும் நோக்குடன் தொழிற்படுத்தப்படவுள்ளது. வழிகாட்டலின் நடைமுறைப்படுத்தலிற்கு ஆதரவளிக்கும் பொருட்டு, வழிகாட்டலுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிலைபேறான நடைமுறைகளை ஒருங்கிணைப்பதற்கு அவசியமான அறிவு மற்றும் கருவிகளை ஆர்வலர்களுக்கு வழங்குவதற்கு **இலங்கைப் பசுமை நிதி வகைப்படுத்தல்** குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளிட்ட **இயலாற்றலைக் கட்டியெழுப்புகின்ற நடவடிக்கைகளை** மத்திய வங்கி தொடர்ந்து மேற்கொள்ளும். நீடித்துநிலைத்திருக்கக்கூடிய நிதியிடல் நடவடிக்கைகளுக்கான தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பானது ஏதேனும் அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட அவசியமான நடவடிக்கைகளுடன் இற்றைப்படுத்தப்பட்ட பாசல் மையக் கோட்பாடுகளின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும்.

### 3.5. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

நிலையான மற்றும் வினைத்திறனான கொடுப்பனவு முறைமையொன்றினைப் பேணுவதானது ஆற்றல் வாய்ந்த நிதியியல் முறைமையை நிச்சயப்படுத்துவதில் இன்றியமையாததொன்றாகும். **இது தொடர்பாக, பொருத்தமான சட்டம், கொடுப்பனவு உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் முயற்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன.** இலத்திரனியல் கொடுப்பனவுகள் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதனால் கொடுப்பனவு முறையின் சட்ட மற்றும் நிறுவன ரீதியிலான கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட 3 ஆண்டு அனைத்தையுமுள்ளடக்கிய திட்டமொன்றினை மத்திய வங்கி தொடங்கியுள்ளது. இவ்வணுகுமுறையானது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் கண்காணிப்பு, மேற்பார்வை, ஒழுங்குவிதி என்பவற்றை ஆளுகின்ற சட்டக் கட்டமைப்பினை மேம்படுத்துவதுடனும் இலங்கையில் இலத்திரனியல் கொடுப்பனவுச் சந்தையின் கொடுப்பனவுப் புத்துருவாக்கங்கள் மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றை வசதிப்படுத்துவதுடனும் ஆரம்பிக்கின்றது. இதற்கமைய, **கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தினைத் திருத்துகின்ற** செயன்முறையில் மத்திய வங்கி ஈடுபட்டுள்ளது. கொடுப்பனவுடன் தொடர்புடைய செல்லிடச் செயலிகளிற்கான குறைந்தபட்ச இணங்குவிப்பு நியமம் குறித்த வழிகாட்டுதல்கள் போன்ற பல்வேறு துணைநிலைச் சட்டவாக்கங்கள்

சில்லறை இலத்திரனியல் கொடுப்பனவுகளில் விரைவான விரிவாக்கத்தினை வசதிப்படுத்தும் பொருட்டு 2025இல் திருத்தப்படும்.

மத்திய வங்கி **2024ஆம் ஆண்டில் உள்நாட்டு கொடுப்பனவு கொடுக்கல்வாங்கலுக்கான நியமப்படுத்தலிற்கான பன்னாட்டு அமைப்பு 20022 தரங்களுடன் முழுமையாக இணங்குகின்ற ஒரு புதிய அதே நேர மொத்த தீர்ப்பனவு முறைமையை** அறிமுகப்படுத்தியது. **பன்னாட்டு காலக்கெடுப்பிற்கேற்ப அனைத்து எல்லைகளுக்கிடையிலான கொடுப்பனவுகளுக்கு இத்தரத்தினை விரிவுபடுத்துவதற்கு வங்கி திட்டமிட்டுள்ளது.**

பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியானது மேலும் விரிவாக்கப்பட்டு அதிக அணுகும் இடங்களை அடைய குறிப்பாக அரசாங்க கொடுப்பனவுகளை இலக்காக கொண்டிருக்கும். 2025இல், இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட தரவுத் தளங்களற்ற அரச நிறுவனங்கள் இணையத்தள வங்கித்தொழில் நுழைவாயில்/செல்லிடக் கொடுப்பனவுச் செயலிகள் மூலம் பொதுமக்களிடமிருந்து அதேநேர கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதனை இயலச்செய்கின்ற **அரசாங்க இலத்திரனியல் கொடுப்பனவுத் தளமானது** 2024இல் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான முன்னோடிப் பரீட்சிப்பினைத் தொடர்ந்து தொழிற்படுத்தப்படும்.

மேலும், மத்திய வங்கி **வங்கிகளிற்கிடையேயான கொடுப்பனவு முறைமைகளுக்கான அணுகல் முறை மற்றும் கொடுப்பனவுப் பணிகளிற்கான உரிமமளிக்கின்ற முறை ஆகியவற்றை மீளாய்வு செய்வதனை** நோக்காகக் கொண்டுள்ளது. 2025 சனவரி 01 தொடக்கம், **லங்கா கியுஆரிற்கான வணிகக் கழிவு வீதமானது 0.5 சதவீதத்திலிருந்து 1 சதவீதத்திற்கு மீட்டெடுக்கப்பட்டமை** நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நிதியியல் தொழில்நுட்ப தொழில்முயற்சிகள் என்பவற்றின் முனைப்புடனான பின்பற்றுகையினை ஊக்குவிக்கும்.

மேலும், இலத்திரனியல் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய பாதிப்படையக்கூடியதன்மைகளை இனங்கண்டு, **மோசடி முறைகளைக் கண்காணித்து, தேவையான வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம் பொதுமக்களின் நம்பிக்கையினைப் பாதுகாப்பதற்கு** மத்திய வங்கி உறுதிபூண்டுள்ளது. இதன் பகுதியொன்றாக, **2025 மாச்சிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 2024இல் கொடுப்பனவுச் செயலிகளினூடாக அதிகாரமளிக்கப்படாத அணுகலிலிருந்து வாடிக்கையாளர்களின் நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளைப் பாதுகாப்பதற்கான சுற்றறிக்கையொன்றினை** மத்திய வங்கி வெளியிட்டது. இது கொடுப்பனவுச் செயலிப் பாதுகாப்புடன் தொடர்புடைய தற்போதுள்ள ஒழுங்குவிதிகளில் இணைத்துக்கொள்ளப்படும். டிஜிட்டல் கொடுப்பனவுகளைப் பின்பற்றுவதிலுள்ள இடைவெளியினைக் குறைப்பதற்கு, இலத்திரனியல் கொடுப்பனவுப் பணிகள், அவற்றின் நன்மைகள், தொடர்புடைய பாதுகாப்புச் சிறப்பியல்புகள் மற்றும் மோசடி மற்றும் ஏமாற்றுதல்கள் போன்ற சாத்தியமான அச்சுறுத்தல்கள் என்பன குறித்து **நாடளாவிய ரீதியிலான பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை** மத்திய வங்கி வெகுசன ஊடகங்களினூடாக நடத்தும்.

### 3.6. நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகளை மேம்படுத்தல்

மத்திய வங்கி மிகவும் வெளிப்படையானதும் வாடிக்கையாளரை மையப்படுத்திய நிலைபெறத்தக்க நிதியியல் முறைமையைப் பேணி வளர்ப்பதை நோக்காக கொண்டமையினால், நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை வலுப்படுத்துவது முக்கிய முன்னுரிமைகளிலொன்றாக காணப்படுகின்றது. நிதியியல் வாடிக்கையாளர்களுக்கு நிதியியல் முறைமை மீது நம்பிக்கையை மேம்படுத்தும் பொருட்டு, இவ்விடயத்துடன் தொடர்புடைய மூலோபாய முன்னெடுப்புகளின் தொடர்கள் 2025ஆம் ஆண்டிற்கும் அதற்கு அப்பாலும் திட்டமிடப்பட்டுள்ளன.

சந்தை நடத்தையில் தளத்திலானப் பரீட்சிப்புகளின் காலஇடைவெளியையும் விரிவையும் அதிகரிப்பதன் மூலம் **சந்தை நடத்தை மேற்பார்வையின் நோக்கெல்லை** விரிவுபடுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளும் பெருமளவில் இணங்குவதை உறுதிசெய்து தோற்றம்பெற்றுவரும் நிதியியல் வாடிக்கையாளர் இடர்நேர்வுகளை நிவர்த்திசெய்தை இது இலக்காகக் கொண்டுள்ளது.

**முக்கியமான நிதியியல் வாடிக்கையாளர் இடர்நேர்வுகள் மற்றும் அதிருப்தியான விடயத்தை நிவர்த்திசெய்வதற்கும், நியாயமற்ற நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் மற்றும் இணங்குவிப்பை உறுதிசெய்வதற்கும், தெளிவான வழிகாட்டுதல்களை அமைப்பதற்கும்,** கட்டணங்கள் மற்றும் விதிப்புகள், தண்டப் பணங்கள் மற்றும் எதிர்கால கடப்பாடுகள் மீதான வட்டியை விதித்தல் போன்ற விடயங்களை மையப்படுத்திய பணிப்புரைகள் வெளியிடப்படவுள்ளன.

வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் முயற்சியில், மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அனைத்து நிதியியல் பணி வழங்குநர்களின் வட்டி வீதங்கள், கட்டணங்கள் மற்றும் விதிப்புகள் போன்ற முக்கிய **நிதியியல் தகவல்களைக் காண்பிப்பதற்கு** திட்டமிடப்பட்டு, தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர்களை இயலச்செய்துள்ளது.

## 4. மத்திய வங்கியின் ஏனைய கொள்கைகளும் தொழிற்பாடுகளும்

***முக்கிய பண்புகள்***

- *தொடர்புடைய கொள்கைக் கட்டமைப்பினை விரிவுபடுத்துவதன் மூலம் நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்தி ஊக்குவிப்பதற்கான முயற்சிகள்*
- *பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்திற்குப் பொதுப் படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாட்டை சுமூகமாகப் பரிமாற்றுவதற்கு வசதியளித்தல்*
- *சந்தையின் தோற்றம்பெற்று வரும் தேவைகளைக் கருத்திற்கொண்டு, ஏற்கனவேயுள்ள வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளின் அனைத்தையுமுள்ளடக்கிய மீளாய்வொன்றை நடாத்துதல்*
- *பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பு மற்றும் ஒழுங்குவிதிகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தல்*
- *ஊழியர் சேமலாப நிதியமானது டிஜிட்டல் மயமாக்கலின் மூலம் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தல்*
- *அதன் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பனதும் நிலையானதுமான வருவாய்களை வழங்குவதற்கான முதலீட்டுச் சொத்துப்பட்டியலை பன்முகப்படுத்துதல்*

மத்திய வங்கி, நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவித்தலை இலக்காக கொண்டுள்ளது. இது அரசாங்கத்திற்கு பல்வேறு முகவராண்மைத் தொழிற்பாடுகளையும் மேற்கொள்கின்றது. எதிர்வரும் காலப்பகுதியில் இவ்விடயப்பரப்புகளில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சில முக்கிய கொள்கைகள் பற்றி இப்பிரிவில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### 4.1. நிதியியல் வசதிக்குட்படுத்தல்

மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி பங்கின் முதன்மை கவனமானது நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பது வரை வளர்ந்துள்ளது. இம்மாற்றம் மிகவும் வசதிக்குட்படுத்தியதும் நிலையானதுமான நிதியியல் முறைமையை நிறுவுவதன் முக்கியத்துவத்தை பரந்தளவில் அங்கீகரிப்பதைக் குறிக்கிறது.

2025ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடைமுறைப்படுத்தலின் பின்னரான பகுப்பாய்வு, நடைபெறவிருக்கும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் மூலோபாயங்கள் மற்றும் 2021 தொடக்கம் 2024 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஒட்டுமொத்தத் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் மூலோபாயம் கட்டம்-Iஇன் கீழ் இடம்பெறும். இது **தேசியளவிலான நிரம்பல்-பக்க அளவீட்டின்** பின்னர் நடைபெறும். **2025ஆம் ஆண்டில், தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் மூலோபாயத்தின் கட்டம் II உருவாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** நாட்டின் நிதியியல் அறிவிற்குட்படாத மக்களுக்கு முறைசார்ந்த நிதியியல் பணிகளின் பயன்பாட்டையும் தரத்தையும்

விரிவுபடுத்துவது தொடர்பிலான குறித்த தலையீடுகளை இப்புதிய கட்டம் கருத்திற் கொள்ளும். மேலும், **பசுமை நிதி வசதிக்குட்படுத்தலை தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் தூண்களில் ஒன்றாக ஒருங்கிணைப்பதன் மூலமும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தூணை** நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் சந்தை நடத்தை மேற்பார்வையாக விரிவுபடுத்துவதன் மூலமும் தற்போதுள்ள நிதியியல் வசதிக்குட்படுத்தல் கொள்கைக் கட்டமைப்பின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதற்கு மத்திய வங்கி எதிர்பார்கின்றது.

### 4.2. பொதுப்படுகடன் முகாமைத்துவம்

ஆரம்பத்திலிருந்து, மத்திய வங்கியினால் முன்னெடுத்துவரும் முகவராண்மை தொழிற்பாடுகளிலொன்றாக பொதுப் படுகடன் முகாமைத்துவம் காணப்பட்டு வருகின்றது. மத்திய வங்கி இப்பொறுப்பை ஏறத்தாழ 75 ஆண்டுகள் கையாண்டதன் பின்னர், பொதுப் படுகடனின் அனைத்து அம்சங்களையும் முகாமைசெய்வதற்கு நிதி அமைச்சிற்கு கீழ் பிரத்தியேகமான தனி அலுவலகமொன்றை உருவாக்குவதற்காக 2024ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் முகாமைத்துவச் சட்டம் இயற்றப்பட்டது. இது, நாணயக் கொள்கையை நடத்துதல் மற்றும் அதே நிறுவனத்தால் பொதுப் படுகடனை முகாமைசெய்வதில் நீண்டகாலமாக நிலவிவரும் நலவுரித்து முரண்பாட்டை அகற்றுவதற்கு உதவும். ***பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்* எனப்படும் பிரத்தியேக நிறுவனத்திற்கு பொதுப் படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டை மாற்றுவதற்கு மத்திய வங்கி வசதியளிக்கும்.** இவ்வலுவலகம் இவ்வாண்டிறுதிக்குள் தொழிற்பாட்டிற்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4.3. வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவத் தொழிற்பாடு மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஏற்பட்டுள்ள மீளெழுச்சி நடவடிக்கையைத் தொடர்ந்து, **வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் தற்போதுள்ள ஒழுங்குமுறைகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகள் போன்றவற்றை மீள்மதிப்பு செய்வதற்காக முழுமையானதும் விபரமானதுமான மீளாய்வொன்று** ஆரம்பிக்கப்படும். இம்மீளாய்வு, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தோற்றம்பெற்றுவரும் மாற்றமடையும் தன்மைகளை மதிப்பிடுவதையும் ஆர்வலர்களின் மாறிவரும் தேவைகள் மற்றும் கரிசனைகளை நிவர்த்தி செய்வதையும் ஒட்டுமொத்த ஒழுங்குமுறை கட்டமைப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இணக்கமின்மைக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்காணிப்பதிலும் தொடங்குவதிலும் பெருமளவு வினைத்திறனையும் செயற்றிறனையும் உறுதிப்படுத்துவதற்கு, 2022ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்றுமதிப்பெறுகைகள் கண்காணிப்பு முறைமை மேலும் அபிவிருத்தி செய்யப்படும். மேலும், **பணத்தை மாற்றும் வர்த்தகத்தை நடத்துவது தொடர்பாக பொருத்தமான கொள்கை வழிமுறைகள், நிதியியல் பணிகளில் நம்பகத்தன்மை வாய்ந்த தொழிற்பாட்டாளராக** இத்துறையை மாற்றும் வகையில் நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4.4. நிதியியல் உளவறிதல்

**பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட பணம் தூயதாக்கலிற்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான இலங்கையின் மூன்றாவது பரஸ்பர மதிப்பீட்டுக் கட்டமைப்பானது 2026 மாச்சில் தொடங்குவதற்கு மீளட்டவணையிடப்பட்டுள்ளது.** பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிப்பதற்கான நாட்டின் முயற்சிகளை இம்மதிப்பீடானது மதிப்பீடு செய்யும். இலங்கை நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் 40 விதந்துரைப்புக்களுடனான இணங்குவிப்பினை நிச்சயப்படுத்த வேண்டுமென்பதுடன் நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் 11 உடனடிப் பெறுபேறுகளின் கீழான அதன் பணம் தூயதாக்கலிற்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பின் வினைத்திறன்தன்மையினை காத்திரமாக இருப்பதனையும் எடுத்துக்காட்ட வேண்டும்.

உயர் மட்ட பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் செயலணியானது 2024 திசெம்பரில் மறுசீரமைக்கப்பட்டதுடன் 2027 யூலையில் பரஸ்பர மதிப்பீடு வெற்றிகரமாக நிறைவடையும் வரை தொடர்ந்து தொழிற்படும். முந்தைய 2014/2015ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பரஸ்பர மதிப்பீடு மற்றும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான 2021/2022 தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டின் போது அடையாளம் காணப்பட்ட நிதியியல் நடவடிக்கைச் செயலணிப் பிரமாணம் மற்றும் இடைவெளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை ஒப்புதலளிக்கப்பட்ட 24 நிறுவனங்களின் விசேட நடவடிக்கைத் திட்டங்கள் தொடர்புடைய ஆர்வலர்களினால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் நடைமுறைப்படுத்தல் முன்னேற்றமானது பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் செயலணியினால் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகின்றது.

**நிதியியல் உளவறிதல் பிரிவு அதன் ஆர்வலர்கள் மற்றும் பணிக்குழுக்களுடன் 2025இன் இரண்டாம் காலாண்டளவில் தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டிற்கு மற்றொரு இற்றைப்படுத்தலினை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றது.** இம்மதிப்பீடு 2021/2022 இடர்நேர்வு மதிப்பீட்டினை இற்றைப்படுத்துவதற்கு மேலதிகமாக புதிய பகுதிகளாக வரிக் குற்றங்கள் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகள் குறித்த மதிப்பீட்டினைக் கொண்டிருக்கும். நிதியியல் உளவறிதல் பிரிவு மற்றும் நிதியல்லாத நிறுவனங்கள் மற்றும் அவற்றின் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளிற்கு இடையிலான ஒத்துழைப்பினை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு, நிதியியல் உளவறிதல் பிரிவு பல்வேறு பணிக்குழுக்களை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றது. இதற்கமைய, நிதியியல் உளவறிதல் பிரிவு ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புகள், குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் துறைகளின் தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் துறை

சார்ந்த விசேட அமைப்புக்கள் போன்ற ஏனைய ஆர்வலர்கள் உட்பட தனித்தனியான பணிக்குழுக்களை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் சட்டக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு **பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் சட்டவாக்கங்களின் மூன்று முக்கிய பகுதிகளிற்கான திருத்தங்களை வரைவதன் இறுதி கட்டத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவு காணப்படுகின்றது.** பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் உருவாக்கமானது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கான திருத்தங்கள் மூலம் மேற்கொள்ளப்படும். இச்சட்டவாக்கத் திருத்தங்கள் 2025இன் இரண்டாம் காலாண்டளவில் சட்டமாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் மீளாய்வு, வரைவு மற்றும் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வெளியிடுவதானது 2025இன் இரண்டாம் காலாண்டளவில் நிறைவுசெய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பயன்பெறு சொத்துரிமைத் தேவைப்பாடுகள் குறித்த கம்பனிச் சட்டத்திற்கான திருத்தங்களை அமல்படுத்துவதில் நிதியியல் உளவறிதல் பிரிவு துணைபுரியுமென்பதுடன் பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான ஏதேனும் ஏனைய சட்டவாக்கச் சீர்திருத்தங்கள் அல்லது ஒழுங்குவிதிகளிற்கு உதவும்.

உளவறிதல் பகிர்வினை மேம்படுத்துவதற்கும், பன்னாட்டு ஒத்துழைப்பினை வலுப்படுத்துவதற்கும், உலகளாவிய நியமங்களுக்கு இணங்குவிப்பதற்கும், **உள்நாட்டிலும் தொடர்புடைய வெளிநாட்டு இணைதரப்பினர்களிடையேயும் தேவைக்கேற்ப இருபுடைப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதனை நிதியியல் உளவறிதல் பிரிவு நோக்காகக் கொண்டுள்ளது.** வினைத்திறன்மிக்க பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நடைமுறைப்படுத்தலின் முக்கியத்துவத்துடன் தொடர்புடைய ஆர்வலர்களிடையேயான விழிப்புணர்வினை நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்ந்து மேம்படுத்தும். பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுடன் தொடர்புடைய கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதானது நாட்டிற்கு மேம்பட்ட நிதியியல் முறைமை ஒருங்கிணைப்பு, அதிகரித்தளவிலான வெளிநாட்டு முதலீடுகள், பன்னாட்டு நிதியியல் சந்தைகளுக்கான அதிகரித்தளவிலான அணுகல் மற்றும் சிறந்த ஆளுகை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கு ஆதரவளித்தல் என்பன உள்ளடங்கலாக எண்ணற்ற பொருளாதார, சமூக மற்றும் தேசிய பாதுகாப்பு நன்மைகளை வழங்கும்.

### 4.5. ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியினால் முகாமைசெய்யப்படும் ஊழியர் சேமலாப நிதியமானது நாட்டின் பாரியளவிலான ஓய்வூதிய நிதியமாகக் காணப்படுவதுடன், அதன் பெறுமதி 2024இல் ரூ. 4 ரில்லியன் தொகையினை விஞ்சிக் காணப்படுகின்றது.

**தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, ஊழியர் சேமலாப நிதியமானதுதரவுகளை இலத்திரனியல் மயமாக்கல் மற்றும் உறுப்பினர்களின் பங்களிப்பிற்கான இணையவழி கொடுப்பனவு போன்ற பல அதிநவீன தொழில்நுட்பத்துடன்கூடிய தீர்வுகளை நடைமுறைப்படுத்துகின்றது.** சந்தேகமின்றி, இணையவழிக் கொடுப்பனவு வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதானது தொழில்தருநர்கள் தங்கள் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பினைச் செலுத்துவதில் வசதியையும் நெகிழ்ச்சித்தன்மையையும் வழங்குவதுடன் இம்மாற்றம் செயன்முறைகளை மேலும் நெறிப்படுத்துவதுடன் நிர்வாகச் சுமைகளையும் குறைக்கும். பங்களிப்புச் சேகரிப்பு நடைமுறைகளை நவீன தீர்வுகளுடன் வலுப்படுத்தும் வேளையில் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்திற்கு முன்னரான மற்றும் பின்னரான சலுகைகளை வழங்குவதில் செயற்றிறனை மேம்படுத்தவதற்கு பல நடவடிக்கைகள் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன. **மேலும், தற்போதுள்ள முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மறுசீரமைப்பதற்குத் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பானது நவீனமயமாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** இவ்வனைத்தையுமுள்ளடக்கிய தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப தீர்வானது தன்னியக்கச் செயன்முறைகளை வசதிப்படுத்தி, நிதியின் மிகவும் வினைத்திறனான முகாமைத்துவத்திற்கு வழிவகுக்கும்.

**ஊழியர் சேமலாப நிதியானது** உயர் இடர்நேர்வு சீராக்கப்பட்ட வருவாய் வீதமொன்றினை அடையும் வேளையில் நிதியின் பாதுகாப்பு மற்றும் நீண்ட கால நிலைத்திருக்கும்தன்மையை நிச்சயப்படுத்தும் பொருட்டு **அதன் முதலீட்டுச் சொத்துப்பட்டியலினை பன்முகப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை ஆராய்கின்றது.** இவ்வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், ஊழியர் சேமலாப நிதியானது அதன் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் நிலையான ஓய்வூதியச் நன்மைகளை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பினைப் பேணுவதனை நோக்காகக் கொண்டுள்ளது.

## 4.6. மத்திய வங்கியின் தொடர்பூட்டல் உபாயம்

மத்திய வங்கி அதன் நடவடிக்கைகளிலுள்ள வெளிப்படைத்தன்மையினதும் பொறுப்புக்கூறும்தன்மையினதும் முக்கியத்துவத்தை புரிந்துகொள்கின்றது. 2025ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் தொடர்பூட்டல் உபாயமானது பொதுமக்களின் புரிதல் மற்றும் நம்பிக்கையினை வளர்ப்பதற்கான அணுகுகக்கூடியதன்மை மற்றும் வசதிக்குட்படுத்தும் தன்மை என்பனவற்றிற்கும் முன்னுரிமையளிக்கும். **மத்திய வங்கியானது அதன் கொள்கையுடன் தொடர்புடைய தகவல்கள் சாதாரண மக்களுக்கும் சென்றடைவதையும் சரியாக விளக்கப்படுவதையும் உறுதிசெய்வதை நோக்காகக் கொண்டுள்ளது.** புள்ளிவிபர தரவுகளின் அணுகக்கூடியதன்மையையும் பயன்பாட்டையும் மேம்படுத்தும் வகையில், அவற்றின் பரப்புதலை முன்னேற்றுவதற்காக பல்வேறு வழிமுறைகள் எடுக்கப்படும்.

மத்திய வங்கியானது பொதுமக்களின் எண்ணத்தை அறிந்து, சிறந்த தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவும் நுண்ணறிவுகளைச் சேகரிப்பதற்கும் அதன் ஆர்வலர்களுடன் தொடர்ந்தும் நெருக்கமான கலந்துரையாடலை மேற்கொள்ளும்.

## 4.7. மத்திய வங்கியின் உள்ளக செயற்றிறனை வலுப்படுத்துதல்

நாட்டின் முன்னேற்றத்திற்கு அதன் பணிப்பாணைகளை செயற்றிறனாக நிறைவேற்றுவதற்கு அதன் திறன்களின் இயக்கவியலை நிர்வகிக்க தனது மனித மூலதன ஆளுகை, நிபுணத்துவம், திறன்கள், துறைகள் மற்றும் முழுமையை வலுப்படுத்தவும் நிறுவனமயமாக்கவும் மத்திய வங்கி உறுதிபூண்டுள்ளது.

வள பயன்பாட்டை மேம்படுத்துதல், திறமையான தரவு முகாமைத்துவம் மற்றும் சிறந்த தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு மத்திய வங்கியின் தொழில்நுட்ப திறனை மேம்படுத்த பல முன்னெடுப்புக்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன, அதே நேரத்தில் **இணைய பாதுகாப்பு அம்சங்கள் மீது வரும் காலகட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்படும்.**

இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான அடுத்த மூலோபாய மைற்கல்லாக **மத்திய வங்கிக்குள் இடர்நேர்வு விருப்பு கட்டமைப்பை** செயல்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மத்திய வங்கி தனது அன்றாட செயல்பாடுகளில் **சுற்றுச்சூழலுக்கு சாதகமான மற்றும் நிலையான நடைமுறைகளை** ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

## 5. இறை, நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுக் கொள்கை ஒருங்கிணைப்பு

ஒத்திசைவான பொருளாதாரக் கொள்கையை உருவாக்குவதற்கும், மத்திய வங்கியின் குறிக்கோள்களை அடைவதற்கும், இறை, நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாடு கொள்கைகளில் மத்திய வங்கிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் செயற்றிறனான ஒருங்கிணைப்பு மிகவும் முக்கியமானது. விலை உறுதிப்பாட்டு நோக்கத்தைத் மேற்கொள்வதில், பணவீக்கமானது அடிக்கடி நிரம்பல் பக்க காரணிகள் மற்றும் இறைக் கொள்கை நடவடிக்கைகளின் தாக்கங்களால் பாதிக்கப்படுவதால், முறையான கொள்கை ஒருங்கிணைப்பு அவசியமாகும். நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டு நோக்கத்தை மேற்கொள்வதில் இது சமமளவு முக்கியமானது. அரசாங்கக் கொள்கைகள் நிதித் துறையை பாதிக்கலாம் என்பதுடன் அதே நேரத்தில் நிதித் துறை தொட்பான மத்திய வங்கியின் கொள்கைகள் அரசாங்க நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

**மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒருங்கிணைப்புச் சபையானது அரசாங்கத்திற்கும் மத்திய வங்கிக்கும் இடையிலான இறை, நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுக் கொள்கைகளின் ஒருங்கிணைப்பிற்கு வழிவகுக்கிறது**. ஒருங்கிணைப்புச் சபை காலாண்டுக்கு ஒருமுறை கூடி ரேண்டப்பொருளாதார மற்றும் நிதி நிலைமைகள் மற்றும் தோற்றப்பாடு, இறை, நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டு ஒருஙகிணைப்பு தொடர்பான சாத்தியமான இடைவெளிகள் ஆகியவை விரிவாக விவாதிக்கப்படுவதுடன் உபாயங்கள் மற்றும் எவ்வகையான சவால்களையும் எதிர்கொள்வதற்கான முன்னோக்கிய வழிமுறைகள் ஆகியவை கலந்துரையாடப்படுகின்றன. இதற்கிடையில், **நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு மற்றும் நிதியியில் முறைமை மேற்பார்வைக் குழு ஆகியவற்றின் மூலம் மத்திய வங்கி, அரசாங்கம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புகள் உள்ளடங்கலான ஏனைய பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்து,** நெருக்கடி தயார்நிலை மற்றும் ஒருங்கிணைப்பு செயல்தடைகளின் அபாயத்தைக் குறைப்பதில் கவனம் செலுத்தி, ஆரோக்கியமான நிதி முறைமையை பராமரிக்கிறது.

மேலதிகமாக, மத்திய வங்கியியல் மற்றும் தொடர்புடைய பொருளாதார மற்றும் நிதியியல் பிரச்சினைகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து தேவை ஏற்படும்போது மாண்புமிகு சனாதிபதி மற்றும் நிதியமைச்சர் மற்றும் துணை அமைச்சர்களுடன் சுமுகமான கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

**மத்திய வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி,** மத்திய வங்கியின் நடவடிக்கைகள் மற்றும் அதன் தாக்கங்கள் மற்றும் மத்திய வங்கி தொடர்பான விடயங்களை விவரிக்க, கோரும்போது மத்திய வங்கியின் முக்கிய அதிகாரிகள் நாடாளுமன்றத்தின் பல குழுக்கள் முன் வெளிப்பாடுகளை மேற்கொள்கிறார்கள்.

பல ஆண்டுகால நெருக்கடிகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைக்குப் பிறகு பொருளாதாரம் ஒப்பீட்டளவில் இயல்பான காலகட்டத்தில் நுழையும் என்று எதிர்பார்க்கப்படுவதால், இதுபோன்ற இறை-நாணய-நிதியியல் முறைமைக் கொள்கைகளின் ஒருங்கிணைப்பு

தொடர்ச்சியாக சம அளவில் முக்கியமானதாக இருக்கும். ஆரோக்கியமான கொள்கை ஒருங்கிணைப்பு ஓர் நிலையான பேரண்டப் பொருளாதார சூழலுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தனியார் துறை பங்குதாரர்கள் உள்ளடங்கலாக பொருளாதாரத்தில் உற்பத்தித்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கும், நிலையான மற்றும் உள்ளடங்கலான வளர்ச்சியை வசதிப்படுத்துவதற்கும் ஒரு அத்தியாவசிய தேவையாகும்.

## 6. முடிவுரை

பல கடினமான ஆண்டுகளுக்குப் பின்னர், மீள்நிலைநிறுத்தப்பட்ட பேரண்டப்பொருளாதார மற்றும் நிதியியல் துறையின் உறுதிப்பாட்டுடன் இன்று இலங்கை அதிகரித்த வலுவுடன் காணப்படுகிறது. இதேபோன்ற சூழ்நிலைகளை எதிர்கொண்ட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை எதிர்பார்த்ததை விட வேகமாக மீட்சியடைந்தாலும், நடுத்தர முதல் நீண்ட காலத்திற்கு உறுதிப்பாட்டினை பேணுவது என்பது அவசியமான பொருளாதார சீர்திருத்தங்களைத் தொடர நாடு உறுதிபூணுவதன் மீது தங்கியுள்ளது. வளர்ச்சிப் பாதையில் ஒரு விரைவான உருமாற்றத்தை அடைவது முன்னைய இழப்புக்களை ஈடுசெய்வதற்கும் வளர்ச்சி உள்ளாற்றலை மேம்படுத்தவும் அவசியமாகும். இது நாட்டின் கடன் சுமக்கும் திறனை மேம்படுத்த உதவும். பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை விட்டுக்கொடுக்காமல் அதிர்வுகளைத் தாங்கும் வகையில் தாங்கியுருப்புகளைக் கட்டியெழுப்பதும் வளர்ச்சியை துரிதப்படுத்துவதும் நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத அடுத்த கட்டமாகும். இது தொடர்பில், உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை பராமரிப்பதிலும், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பாதுகாப்பதிலும் மத்திய வங்கி தனது வகிபாகத்தை தொடரும் அதே வேளையில் பொருளாதாரம் அதன் உள்ளாற்றலை எய்துவதற்கு உதவும்.

**உங்கள் அனைவருக்கும் நன்றி! இந்த ஆண்டு உறுதிப்பாடு மற்றும் சுபீட்சம் நிறைந்த ஒரு ஆண்டாக அமைய வாழ்த்துகிறோம்!**